**CC.No. 154/2022**

19.03.2024

**எ.சா.1 ராஜேஸ்வரி**

**குறுக்கு விசாரணை**

1) எனக்கு சொந்த வீடு கருவியபட்டியில் உள்ளது. என் கணவர் தர்மபுரியில் சிற்ப வேலை செய்து வருகிறார். கோவில் வேலை சம்பந்தமாக வெளி மாநிலத்திற்கு வேலைக்கு செல்வார் என்றால் சரியல்ல. 9786204155 என்பது என்னுடைய அலைபேசி எண்தான். மஞ்சுளா என்பவர் இறந்தது தொடர்பாக என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. மேற்படி அலைபேசி எண்ணின் Call details எடுத்தால் நான் யாரிடம் பேசியிருக்கிறேன் மற்றும் என்னுடன் யார் பேசினார்கள் என்ற உண்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் சித்தாலாட்சி பள்ளியில் படித்தேன். நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் படிக்க தெரியுமா என்றால் ஆங்கிலத்தில் கையொப்பம் மட்டும் செய்வேன் ஆங்கிலம் படிக்க தெரியாது. இறந்த மஞ்சுளா என்பவர் எனக்கு தங்கை முறையாவார்.

2) மல்லிகா எனக்கு அண்ணி முறை ஆவார். இறந்த மஞ்சுளாவிற்கு சித்தி முறையாவார். எனக்கு அறிவிப்பு வந்ததது. அதற்கு புகார்தாரர் மீது காவல்துறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. எனக்கு விபரம் தெரியவில்லை. 2 வது அறிவிப்பு வந்தபோது நான் என் வழக்கறிஞரை சந்தித்து பதில் அறிவிப்பு கொடுத்தேன். புகார்தாரரை தெரியாது என்ற சூழ்நிலையில் புகார்தாரரை குறித்து தெரிந்து கொள்வதற்கு விசாரித்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தவுடன் நீதிமன்றத்தில் ஆஜரானேன். மஞ்சுளாவிடம் கொடுத்த காசோலைகள் தவறாக பயன்படுத்தப்பட்ட விபரம் தெரிந்தவுடன் வங்கியில் stop payment அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. வங்கியில் நேரடியாக சென்று விசாரணை செய்தேன். 2016 க்கு முன்பே ICICI கண்டனுர் கிளையில் வங்கியில் கணக்கு தொடங்கப்பட்டு இருந்து 2016 வரை வரவு செலவு வைத்திருந்தேன். அதன் பின்பு வரவு செலவு செய்யவில்லை.

3) நான் மஞ்சுளாவிடம் எப்போது காசோலைகளை கொடுத்தேன் என்றால் தேதி, வருடம் தெரியாது. லோன் வாங்கியபோது கொடுத்தேன். எத்தனை காசோலைகள் கொடுத்தேன் என்றால் 2 காசோலைகள் கொடுத்தேன். முதல் காசோலை பூர்த்தி செய்யும் போது தவறாகிவிட்டதால் 2 வது காசோலையை வாங்கினார். இரண்டு காசோலைகளிலும்

கையொப்பம் செய்து கொடுத்தேன். எனது காசோலை புத்தகத்தை மஞ்சுளாவிடம் கொடுத்து வைத்திருந்தேன். மஞ்சுளா லோன் தொகையாக ரூ. 50 ஆயிரம் வாங்கி கொடுத்தார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் எனது அலைபேசி எண்ணில் இருந்து எதிரியின் அலைபேசி எண்ணிற்கு பேசியுள்ளேன் என்றாலும், எதிரியும் என்னிடம் பேசியிருக்கிறார் என்றால் இல்லை. எனது call details ஐ எடுத்துப்பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

4) 19.09.2022 ல் புகார்தாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு நான் 02.06.2023 ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் முதல் அறிவிப்பு கிடைக்கபெற்று 1 மாதம்கழித்து 2 வது அறிவிப்பு வந்தபோது பதில் அறிவிப்பு கொடுத்தேன். புகார்தாரர் என் மீது வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் நானும், மல்லிகாவும் சேர்ந்துபின் யோசனை செய்து தாமதமாக பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மஞ்சுளா இறந்தபின்தான் எனக்கு அறிவிப்பு கிடைத்தது. எ.சா.ஆ. 1 மற்றும் 2 ஆவணங்களில் கண்டுள்ள அஞ்சலக ரசீதுகளில் 02.06.2023 அன்று பதில் அறிவிப்பு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்தவுடன் பதில் அறிவிப்பு கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் ஏழையா, பணக்காரரா என்பது குறித்து எனக்கு தெரியாது.

5) புகார்தாரர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் மணக்குடி கிராமத்தில் தென்னந்தோப்பு வைத்து அதன் மூலமாக புகார்தாரருக்கு பல லட்சம் வருமானம் வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் போன்ற தொகையை கடன் கொடுப்பதற்கு வசதி இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தின் முன்பு ஆங்கிலத்தில் Specimen Signature செய்ய தயாரா இருக்கிறேன் என்றால் சரிதான். கை ரேகையை யாராலும் மாற்ற முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது இல்லை, கைரேகையும் என்னுடையது இல்லை. கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகையை கைரேகை நிபுணருக்கு அனுப்பி பரிசோதனை செய்ய எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

6) நானும் மஞ்சுளாவும் புகார்தாரரின் வீட்டிற்கு சென்று கடன் தொகையை பெற்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டில் உள்ள

கையெழுத்து  மஞ்சுளா எப்போது வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையிலோ, வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலோ மஞ்சுளாவிடம் கடனுறுதி சீட்டு கொடுத்ததாக நான் சொல்லவில்லை என்றால்  அதுபற்றி எனக்கு தெரியாது. நான் புகார்தாரரிடம் ரூ. 2 லட்சத்து 50 ஆயிரம் கடன் பெற்றேன் என்றாலும், மஞ்சுளா ரூ. 3 லட்சம் கடன் பெற்றார் என்றாலும் சரியல்ல. மஞ்சுளா கடன் பெற்ற விபரம் எனக்கு தெரியாது.

7) நான், மஞ்சுளா மற்றும் மல்லிகா ஆகிய மூவரும் நெருங்கிய உறவினர் என்றால் ஒரே குழுவில் இருந்தோம். நாங்கள் மூவரும் பணம் பெற்றுக்கொண்டு மோசடி செய்வதை வழக்கமாக கொண்டவர்கள் என்றால் சரியல்ல.  மஞ்சுளாவின் இறப்பை நான் பணத்தைபெற்றுக்கொண்டு மோசடி செய்வதற்கு சாதகமாக பயன்படுத்தி கொள்கிறேன் என்றால் சரியல்ல.  நானும், மல்லிகாவும் புகார்தாரரிடம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக காசோலை கொடுத்தோம் என்றாலும், அது பணமாகாமல் திருப்பப்பட்டு அறிவிப்பு வந்தவுடன் நானும், மல்லிகாவும் திட்டமிட்டு ஆழ்ந்து யோசனையிட்டு பதில்அறிவிப்பு  தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மல்லிகா எனக்க போனில் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த விபரத்தை சொன்னார். நான் வாங்கிய கடனிற்கும் மஞ்சுளா இறப்பிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.நான் எந்த கடனும் வாங்கவில்லை.

8) என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில்  உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கு காசோலையில் கையொப்பத்தில்  உள்ள "S” என்ற எழுத்தும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பத்தில் உள்ள "S” என்ற எழுத்தும் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் ஒரே மாதிரியாக போடலாம் ஆனால் அது என்னுடையது இல்லை. காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் இல்லை. காசோலையில் உள்ள மற்ற வாசகங்களும் என்னால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் இல்லை.  என்னிடம் காட்டப்பட்ட கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தும், கைரேகையும் என்னுடையது என்றால் இல்லை.  அந்த கடனுறுதி சீட்டை நான்  பூர்த்திசெய்து வந்து புகார்தாரரிம் கொடுத்தேன் என்றாலும்,மஞ்சுளா அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றாலும்,  சரியல்ல. நான் போடவில்லை.

9)  நான் புகார்தாரரிடம் கடன் பெற்றுக்கொண்டு காசோலை  கொடுத்துவிட்டு திட்டமிட்டு மோசடி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனது நெருங்கிய உறவினரான

மல்லிகாவும், என்னைப்போலவே மோசடி செய்கிறார் என்றால் சரியல்ல. இறந்த மஞ்சுளா நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல முடியாது என்பதற்காக மஞ்சுளாவின் இறப்பை எனக்கு சாதகமாக பயன்படுத்திகிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை எனக்கு யார் என்றே தெரியாது என்று நான் கட்சி செய்த வரும் நிலையில் உண்மையில் புகார்தாரரிடம் இருந்து பணம் பெறவில்லை என்றால், புகார்தாரரிடம் இருந்து புகார்தாரரை மோசடி செய்ததாக அறிவிப்பு வந்தவுடன் உடனடியாக புகார்தாரர் மீது காவல் துறையில் புகாரோ, உடனடியாக வழக்கறிஞர் பதில் அறிவிப்போ அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் பணம் பெற்றுக்கொண்டு காசோலை கொடுத்து மோசடி செய்யும் குற்றத்திற்காக நான் தண்டிக்கப்படவேண்டியவர் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.